திருப்பூரின் தென்பகுதியில் பனியன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி திருப்பூரில் தற்போதுள்ள இரண்டாவது (E.S.I.) மருந்தகத்தை இரு பகுதிகளாகப் பிரித்து கூடுதலாக மருந்தகம் ஒன்று தென் பகுதியில் நிறுவுவது குறித்து, சுகாதார—குடும்ப நலத்துறை இயக்குநர் ஆலோசித்து வருகிறார். மருந்தகத்திற்காக தனியார். கட்டிடம் ஒன்று வாடகைக்கு அமர்த்தும் முயற்சியும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே. திருப்பூரின் தென் பகுதியில் பனியன் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் இருக்கும் பகுதியிலே சீக்கிரத்தில் அந்த மருத்துவமனை துவக்கப்படுமா? என்றைக்கு அந்த மருத்துவமனை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கூடிய விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள ஆதீன நிலங்கள்

* 233 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருவாடுதுறை ஆதீனம் நிலங்களுக்கு வடக்கு கோடை மேல் தெற்கு கோடை மேல் அழகியன் கால் நதி யுன்னிகால் பாசனத்திற்கு மணிமுத்தார் அபிவிருத்தி தீர்வை வசூலிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

கீழ்தஞ்சாவூர் வருவாய்த்துறை நிர்வாகம்

* 234 வினா திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்தஞ்சை போலிஸ் நிர்வாகம் தனியாக பிரிக்கப் பட்டது போல், ரெவின்யூ நிர்வாகத்தையும் தனியாகப் பிரிவினை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1972 பிப்ரவரி 1]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இப்போது இந்த மாவட்டமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதையாவது இரண்டாகப் பிரிக்க அட்மினிஸ்ட்ரேஷன் ரீஃபார்ம் கமிஷனுக்கு ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இல்லை.

ஈரோட்டில் தையல் பூ வேலை செய்யும் நிலையம்

* 235 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், ஈரோடு, பவானிம் துணிகளுக்குப் பெரிய மார்க்கெட்டாக இருப்பதால் அங்கு மிஷின் மூலம் எம்ப்ராய்டரி செய்கின்ற (மிஷின் மூலம் பின்னுகின்ற) தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

பல்லடத்திற்கு சுருட்டுத் தொழிற்சாலை

* 235 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் அரசாங்கத்தின் மூலம் சுருட்டுத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Ground Water Project

* 237 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. the Minister held discussion in January 1968 with the U.N. Mission on matters relating to the second phase of the U.N. Ground Water Project; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இந்தப் பேச்சுவார்த்தையின் பொழுது குழு, ஒருசில குறிப்புகள் மீது எழுத்து மூலமாக விளக்கம் கேட்டது. விளக்கம் வேண்டப்பட்ட குறிப்புகளும் அவற்றுக்கு அளிக்கப்பட்ட பதிலும், அவைமுன் வைக்கப்பட்ட அறிக்கையில் @ கொடுக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் நிலைத் திட்டம் பற்றிய விவரங்களும் அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

@ 678–693ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.